# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1662/1 - 2010 ජූලි 12 වැනි සඳුදා - 2010.07.12

*1662/1 ஆம் இலக்கம் – 2010 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2004 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, நிதிச் சட்டம்

*2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 22ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 26ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*நிதி, திட்டமிடல் அமைச்சர்.*

*நிதி, திட்டமிடல் அமைச்சு,*
*கொழும்பு,*
*2010, யூலை 12.*

**ஒழுங்குவிதி**

1. இந்த ஒழுங்கு விதிகள் 2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநர்கள் அறவீட்டு (விதிப்பனவு) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படுவதுடன் 2010.07.15 ஆந் திகதியிலிருந்து பயன்வலுப்பெறுதலும் வேண்டும்.

2. இந்த ஒழுங்குவிதிகள், 1991 ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் சட்டத்தின் 17ஆம் பிரிவின் கீழ் உரிமம் பெற்ற சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநர்கள் தொடர்பில் ஏற்புடையதாகும்.

3. இதனகத்துக்குப் பின்னர் குறிப்பிடப்பட்டுள்ள முறையில், இலங்கைக்குள் முடிவுறுத்தப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட ஒவ்வொரு வெளிச்செல்லும் அத்துடன் உள்வரும் சர்வதேச அழைப்பு தொடர்பில் ஒவ்வொரு சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநரினால், 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் III ஆம் பகுதியின் கீழ் விதிக்கப்பட்ட சர்வதேச தொலைத்தொடர்பு ஆணைக்குழு சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநர் அறவீடு (இதனகத்துப்பின்னர் 'அறவீடு' எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஆணைக்குழுவிற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உள்வரும் சர்வதேச அழைப்புகளுக்கான அறவீடு**

4. உள்வரும் சர்வதேச அழைப்புகள் தொடர்பாக, இந்த ஒழுங்குவிதிகளின் அட்டவணை 1 இன் அ வகுதியில் குறிப்பீடு செய்யப்பட்டு ள்ள காலத்திற்கு குறிப்பீடு செய்யப்பட்டுள்ள வீதத்தில் அறவிடப்படுதல் வேண்டும்.

5. ஆணைக்குழுவானது 'உள்வரும் உள்நாட்டு பெறுகைக் கட்டணம்' (ILAC) மற்றும் ' தொலைத்தொடர்பு அபிவிருத்திக் கட்டணம்' (TDC) என்ற இரண்டு வகையான கட்டணங்களின் அடிப்படையில் ஒழுங்கு விதி 04 இன் நியதிகளுக்கமைவாக

**கவனிப்பு**.- *1661/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி தொடரின் இறுதி இலக்கம் 1661/42 ஆகும்.*

உள்வரும் சர்வதேச அழைப்புக்கள் தொடர்பில் அறவிடப்படும் மற்றும் சேகரிக்கப்படும் அறவீடுகளை செலவு செய்யும் ஒவ்வொரு வருடத்திற்கும் (ILAC) மற்றும் (TDC) என்ற வகையில் வரவு வைக்கப்படும் அறவீட்டுத்தொகை இவ்வொழுங்கு விதிகளின் அட்டவணை 1 இன் ஆ மற்றும் இ வகுதிகளில் குறிப்பீடு செய்யப்பட்ட விகிதத்தில் இருத்தல் வேண்டும். சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநர் உள்ளூர் PSTN இயக்குநர்களுக்கு நேரடியாக அட்டவணை 1 இன் வகுதி ஆ இல் குறிப்பிடப்பட்ட ILAC இற்கு செலுத்துதல் வேண்டும்.

6. சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநர், உள்ளூர் PSTN இயக்குநர் ஒருவராகவும் இருக்கும் சந்தர்ப்பத்தில், சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநர் அட்டவணை 1 இன் வகுதி ஆ இன் நிபந்தனைகளுக்கு அமைவாக ILAC தொடர்பில் கம்பனிகளுக்கிடையில் அல்லது கம்பனிகளுக்குள் அவற்றைச் செலுத்துவதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

7. அட்டவணை 1 இல் வகுதி இ நியதிகளுக்கமைவாக சேகரிக்கப்பட்ட TDC இன் 50% (ஐம்பது சதவீதத்தினை) ஆணைக்குழு ஒழுங்குவிதி 11 இல் குறிப்பிடப்பட்டவாறு பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 15 வேலை நாள் முடிவடையும் திகதி அல்லது அதற்கு முன்னர் திரட்டிய நிதியத்திற்கு வரவு வைத்தல் வேண்டும்.

8. அட்டவணை 1 இல் வகுதி இ இன் கீழ் சேகரிக்கப்பட்ட TDC நிதியில் எஞ்சிய 50% (ஐம்பது சதவீதத்தினையும்) மற்றும் அத்தகைய நிதியிலிருந்து சம்பாதிக்கப்பட்ட வட்டி வருமானம் என்பவற்றை சர்வதேச தர சேவைகளையும் நாட்டின் நோக்கத்தினை அடைந்துகொள்ளும் வகையில் இலங்கையில் தொலைத்தொடர்புத்துறைக் கைத்தொழிலின் அபிவிருத்திக்காக ஆணைக்குழு பயன்படுத்துவது பொருத்தமானதாகக் கருதும் விடயங்களுக்கு செலவு செய்ய முடியும்.

**வெளிச்செல்லும் சர்வதேச அழைப்புகளுக்கான அறவீடு**

9. ஒவ்வொரு வருடம் தொடர்பிலும் வெளிச்செல்லல் சர்வதேச அழைப்புகள் (இதனகத்துப்பின்னர் 'வெளிச்செல்லல் உள்நாட்டு அடைவுக் கட்டணம்' (OLAC) எனக் குறிப்பீடு செய்யப்படும் அறவீடு பூச்சிய விகிதமாக இருத்தல் வேண்டும்.

**பொதுவானவை**

10. ஆணைக்குழுவினால் பிரசுரிக்கப்பட்ட இறுதித் திகதி முடிவடைவதற்கு முன்னர் அட்டவணை 1 இன் வகுதி இ இல் குறிப்பிடப்பட்டவாறான கட்டணங்களை, ஒவ்வொரு சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநரும் TDC கொடுப்பனவாக ஆணைக்குழுவுக்கு நேரடியாகச் செலுத்துதல் வேண்டும்.

11. ஒவ்வொரு மாதத்திற்கும் ஏற்புடைத்தான TDC இறுதிக் கொடுப்பனவுத் திகதி ஒவ்வொரு வருடத்தின் ஆரம்பத்திலும் ஆணைக்குழுவினால் பிரசுரிக்கப்படுதல் வேண்டும்.

12. ஒவ்வொரு மாதம் தொடர்பிலும், தனது சொந்த வலையமைப்பிற்குள் முடிவுறுத்தப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட சர்வதேச அழைப்புகளுக்குப் பயன்படுத்தப்பட்ட நிமிடங்களின் மொத்த எண்ணிக்கையைப் பற்றிய பதிவொன்றினை ஒவ்வொரு சர்வதேச தொலைத் தொடர்பு இயக்குநரும் ஆணைக்குழுவிற்கு முன்வைத்தல் வேண்டும்.

13. சர்வதேச தொலைத் தொடர்பு இயக்குநர் மற்றும் உள்நாட்டு PSTN இயக்குநர்கள் இந்த ஒழுங்குவிதியின் அட்டவணை II இல் குறிப்பீடு செய்யப்பட்ட படிவத்தில் ஒவ்வொரு மாதமும் உள்வரும் அழைப்பு மற்றும் வெளிச்செல்லல் அழைப்பு தொடர்பான பதிவொன்றினை கொடுப்பனவு இறுதித் திகதிக்கு முன்னரான ஐந்து நாட்களுக்குள் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

14. சர்வதேச தொலைத் தொடர்பு இயக்குநர் நேரடியாக இணைப்பினைக் கொண்டிராத சந்தர்ப்பத்தில், மாற்றல் இயக்குநர் மற்றும் வேறு விடயமாயின் முடிவுறுத்தல் இயக்குநர் முறையே 30:70 என்ற விகிதத்தில் ILAC இனை பங்கிட்டுக் கொள்வதற்கு பொறுப்புடையவராக இருப்பார்.

15. 12, 13 மற்றும் 17 ஆம் ஒழுங்குவிதிகளில் குறிப்பீடு செய்யப்பட்ட தகவல்களை வழங்குவதற்குத் தவறும் எவரேனும் இயக்குநருக்கெதிராக இச்சட்டத்தின் 23ஆம் பிரிவின் கீழான நியதிகளின்படி பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஆணைக்குழு வழிகாட்டல்களை வெளியிடும்.

16. மேற்குறிப்பிடப்பட்ட 08ஆம் ஒழுங்குவிதியினைச் செயற்படுத்துவதற்காகச் சட்டத்தின் 23ஆம் பிரிவின் நியதிகளுக்கு அமைவாக ஆணைக்குழு வழிகாட்டல்களையும் அறிவுறுத்தல்களையும் வெளியிடுவதற்கு முடியும்.

17. சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநர்கள் மற்றும் உள்நாட்டு PSTN இயக்குநர்கள் அனைத்து கட்டணங்கள் தொடர்பாகவும் தனியான கணக்குகளை பேணுதல் வேண்டுமென்பதுடன், ஆணைக்குழுவினால் வேண்டப்படும் பொழுது, ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் பரிசோதனை மற்றும் கணக்காய்வு நோக்கங்களுக்காக அனைத்து பதிவுகளையும் சமர்ப்பிப்பதுடன் கிடைக்கப்பெறச் செய்தலும் வேண்டும்.

18. அறவீடு செலுத்திய சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநர் ஒவ்வொருவர் தொடர்பிலும் வங்கிக் கணக்கொன்று மற்றும் தனியான பதிவுகளை ஆணைக்குழு பேணும், அவ்வாறு சேகரிக்கப்பட்ட TDC நிதிகள் (வட்டி வருமானம் நீங்கலாக) மற்றும் ஒழுங்குவிதி 08 இன் கீழ் செலவிடப்படாதவைகள் அத்தகைய சேகரிப்பு வருடத்திலிருந்து மூன்று வருட முடிவில் திரட்டிய நிதிக்கு வரவு வைத்தல் வேண்டும்.

19. இத்தால் குறிப்பீடு செய்யப்பட்ட நோக்கங்கள் மற்றும் அத்தகைய நோக்கங்களை செயற்படுத்துவதற்காக வெளியிடப்பட்ட அத்தகைய வழிகாட்டல்களினை அடைந்து கொள்வதற்கு அவற்றினைப் பயன்படுத்துவதற்கும் செலவிடுவதற்குமான காலம் வரையில் அட்டவணை I வகுதி இ இன் கீழ் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதியினை ஆணைக்குழு முகாமை செய்வதுடன் முதலீடு செய்யும்.

20. 2010 சனவரி 1ஆம் திகதிய 1634/33ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2009 திசெம்பர் 29ஆம் திகதிய கட்டளை மூலம் பதிலீடு செய்யப்பட்ட 2005 மார்ச் 31ஆம் திகதிய 1386/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2005ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநர்கள் அறவீட்டு (விதிப்பனவு) ஒழுங்குவிதிகளின் அட்டவணை I இன் அ,ஆ,இ வகுதிகள், அட்டவணை II மற்றும் அட்டவணை III இல் 2010 ஆம் ஆண்டிற்கான அறவீட்டு வீதம் பின்வரும் பந்தியினை பதிலீடு செய்வதன் மூலம் மேலும் நீக்கப்படுகின்றது:-

## அட்டவணை I

(ஒழுங்குவிதி 4)

### வகுதி - அ

**உள்வரும் சர்வதேச அழைப்புகள்மீது செலுத்தவேண்டிய அறவீட்டு வீதம்**

| வருடம் | காலப் பகுதி | நிமிடமொன்றுக்கு வீதம் ஐ.அ. டொலர் சதம் |
|---|---|---|
| 2010 | 2010.04.01 - 2010.07.14 | 9.00 |

### வகுதி - ஆ

**உள்வரும் உள்நாட்டு பெறுகைக் கட்டணம் என்ற வகையில் அறவீட்டு செலவின வீதம் (ILAC)**

| வருடம் | காலப் பகுதி | நிமிடமொன்றுக்கு வீதம் ஐ.அ. டொலர் சதம் |
|---|---|---|
| 2010 | 2010.04.01 - 2010.07.14 | 5.20 |

### வகுதி - இ

**தொலைத்தொடர்பு அபிவிருத்திக் கட்டணம் என்ற வகையில் செலவின அறவீட்டு வீதம் (TDC)**

| வருடம் | காலப் பகுதி | நிமிடமொன்றுக்கு வீதம் ஐ.அ. டொலர் சதம் |
|---|---|---|
| 2010 | 2010.04.01 - 2010.07.14 | 3.80 |

## அட்டவணை III

(ஒழுங்குவிதி 13)

**(PSTN) இயக்குநர்களினால் செலுத்தப்படவேண்டிய உள்நாட்டு கட்டணங்கள்**

| காலம் | காலப் பகுதி | நிமிடமொன்றுக்கு வீதம் ஐ.அ. டொலர் சதம் |
|---|---|---|
| 2010 | 2010.04.01 - 2010.07.14 | 2.50 |

21. 2005, மார்ச் 31 ஆம் திகதிய 1386/24 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2005 இன் 1ஆம் இலக்க சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநர்கள் அறவீட்டு (விதிப்பனவு) ஒழுங்குவிதியின் அட்டவணை II மற்றும் IV ஆம் அட்டவணை மற்றும் 6,7,10,11,12,13,14,15,16,17,18,19 ஆம் ஒழுங்கு விதிகள் மற்றும் 2010, சனவரி 1ஆம் திகதிய 1634/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2009, திசெம்பர் 29ஆம் திகதிய கட்டளை என்பன இத்தால் நீக்கப்படுகிறது.

22. இங்கு குறிப்பிடப்பட்டது எவ்வாறிருப்பினும், 2005 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநர்கள் அறவீட்டு (விதிப்பனவு) ஒழுங்கு விதி மற்றும் அதற்குச் செய்யப்பட்ட ஏதேனும் திருத்தங்களின் 9ஆவது ஒழுங்குவிதியின் நியதிகளுக்கு அமைவாக, சேகரிக்கப்பட்ட தொலைத்தொடர்பு அபிவிருத்திக் கட்டணத்தின் (TDC) மூன்றில் இரண்டினை (2/3) ஆணைக்குழு தொடர்ந்து செலவிடும்.

23. 2005 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநர் அறவீட்டு (விதிப்பனவு) ஒழுங்குவிதியின் 9ஆவது ஒழுங்குவிதியின் கீழ் செய்யப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக செலவிடப்படாத தொலைத்தொடர்பு அபிவிருத்திக் கட்டணத்தின் மூன்றில் இரண்டினை, (2/3) PSTN இயக்குநர்களுக்கான அத்தகைய செலவிடல்களை இறுதியாக நிவர்த்தி செய்வதற்காக அத்தகைய மிகை நிதியத்தினை ஆணைக்குழு தடுத்து வைத்துக் கொள்ளலாம்.

24. 2005 இன் 1 ஆம் இலக்க சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநர் அறவீட்டு (விதிப்பனவு) சட்டத்தின் நியதிகளுக்கு அமைவாக சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநர்களினால் செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்படவுள்ள நிதிக்கு வேறு விதத்தில் குறிப்பிட்டாலன்றி ஒழுங்கு விதிகள் 10,11,12,13,14,15,16,17 மற்றும் 18 என்பன ஏற்புடையதாகுதல் வேண்டும்.

**பொருள் வரைவிலக்கணம்**

25. உள்ளடக்கம் வேறுவகையில் தேவைப்படுத்தினாலன்றி இந்த ஒழுங்கு விதிகளில்:

**'ஆணைக்குழு'** என்பது 1991 ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, இலங்கை தொலைத்தொடர்புகள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு எனப் பொருள்படும்.

**'சர்வதேச தொலைத் தொடர்பு இயக்குநர்'** என்பது 1991 ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புச் சட்டத்தின் கீழ் சர்வதேச சேவைகளை வழங்குவதற்கு உரிமம் வழங்கப்பட்ட இயக்குநர் ஒருவர் எனப் பொருள்படும்.

**'உள்நாட்டு PSTN (பொது ஆளியிடப்பட்ட தொலைபேசி வலையமைப்பு) இயக்குநர்'** என்பது இலங்கையில் நிரந்தர இணைப்பு தொலைபேசி சேவைகளை அல்லது நடமாடும் தொலைபேசி சேவைகளை வழங்கும் உரிமம் வழங்கப்பட்ட இயக்குநர் ஒருவர் எனப் பொருள்படும்.

**'நிலைமாற்றல் இயக்குநர்'** என்பது உள்நாட்டு PSTN இயக்குநரின் வலையமைப்புடன் முடிவுறுத்துவதற்காக சர்வதேச தொலைத் தொடர்புகள் இயக்குநருடன் சர்வதேச இணைப்பை ஏற்படுத்தும் எவரேனும் உள்நாட்டு PSTN இயக்குநர் எனப் பொருள்படும்.

**'உள்வரும் அழைப்புகளுக்கான வட்டி'** என்பது முதலீட்டின் TDC நிதியத்தின் எந்தவொரு உள்வரும் அழைப்புக்கான அறவீடு எனப்பொருள்படும்.

## அட்டவணை I

(ஒழுங்குவிதி 4)

### வகுதி - அ

### உள்வரும் சர்வதேச அழைப்புகள்மீது செலுத்தவேண்டிய அறவீட்டு வீதம்

| வருடம் | காலப் பகுதி | நிமிடமொன்றுக்கு வீதம் ஐ.அ. டொலர் சதம் |
|---|---|---|
| 2010 | 2010.07.15 - 2010.12.31 | 7.00 |
| 2011 | 2011.01.01 - 2011.12.31 | 7.00 |

(ஒழுங்குவிதி 5)

### வகுதி - ஆ

### உள்வரும் உள்நாட்டு பெறுகை கட்டணம் என்ற வகையில் அறவீட்டு செலவின வீதம் (ILAC)

| வருடம் | காலப் பகுதி | நிமிடமொன்றுக்கு வீதம் ஐ.அ. டொலர் சதம் |
|---|---|---|
| 2010 | 2010.07.10 - 2010.12.31 | 5.50 |
| 2011 | 2011.01.01 - 2011.12.31 | 5.50 |

### வகுதி - இ

(ஒழுங்குவிதி 5,7 மற்றும் 8)

### தொலைத்தொடர்பு அபிவிருத்திக் கட்டணம் என்ற வகையில் செலவின அறவீட்டு வீதம் (TDC)

| வருடம் | காலப் பகுதி | நிமிடமொன்றுக்கு வீதம் ஐ.அ. டொலர் சதம் |
|---|---|---|
| 2010 | 2010.07.15 - 2010.12.31 | 1.50 |
| 2011 | 2011.01.01 - 2011.12.31 | 1.50 |

## அட்டவணை II

### அழைப்பு முடிவுறுத்தல்கள்

(ஒழுங்குவிதி 13)

| முடிவுறுத்தப்பட்ட அழைப்புகளின் வலையமைப்பு இயக்குநர் | உள்வரும் அழைப்பு நிமிடங்களின் எண்ணிக்கை (ஒரு தசமதானத்திற்கு) | உள்நாட்டு PSTN இயக்குநருக்கு வழங்கப்பட்ட ILAC கொடுப்பனவுகள் |
|---|---|---|
| இயக்குநர் அ | | |
| இயக்குநர் ஆ | | |

### அழைப்பு முடிவுறுத்தல்கள்

| சர்வதேச தொலைத் தொடர்பு இயக்குநர் ITO | உள்வரும் அழைப்பு நிமிடங்களின் எண்ணிக்கை (ஒரு தசமதானத்திற்கு) | உள்நாட்டு PSTN இயக்குநருக்கு வழங்கப்பட்ட ILAC கொடுப்பனவுகள் |
|---|---|---|
| இயக்குநர் அ | | |
| இயக்குநர் ஆ | | |

### அழைப்பு பிறப்பாக்கங்கள்

(ஒழுங்குவிதி 13)

| அழைப்புகள் ஆரம்பிக்கப்பட்டது எந்த இயக்குநர் வலையமைப்பிலிருந்து | வெளிச்செல்லல் அழைப்பு நிமிடங்களின் எண்ணிக்கை (இறுதி தசமதானத்திற்கு) | உள்நாட்டு PSTN இயக்குநருக்கு வழங்கப்பட்ட OLAC கொடுப்பனவுகள் |
|---|---|---|
| இயக்குநர் அ | | |
| இயக்குநர் ஆ | | |

| வலயமைப்பு அழைப்பு ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநர் | வெளிச்செல்லல் அழைப்பு நிமிடங்களின் எண்ணிக்கை (இறுதி தசமதானத்திற்கு) | ஒவ்வொரு சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநரிடமிருந்து OLAC கொடுப்பனவுகள் |
|---|---|---|
| இயக்குநர் அ | | |
| இயக்குநர் ஆ | | |

**அழைப்பு நிலைமாற்றல்**

*(ஒழுங்குவிதி 15)*

| வலயமைப்பு அழைப்புகள் நிலைமாறலின் மூலம் இயக்குநர் | முடிவுறுத்தல் இயக்குநர் | உள்வரும் அழைப்பு நிமிடங்களின் எண்ணிக்கை (ஒரு தசம தானத்திற்கு) | நிலமாற்றல் இயக்குநருக்கு செய்யப்பட வேண்டிய கொடுப்பனவு (30%) | முடிவுறுத்தல் இயக்குநருக்கு செலுத்த வேண்டிய ILAC கொடுப்பனவு (70%) |
|---|---|---|---|---|
| இயக்குநர் அ | | | | |
| இயக்குநர் ஆ | | | | |

7-813